1982 ஏப்ரல் 2]

(ஏ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: "1982-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன் வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 24/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, '1982 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 24/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஒ) வஃபு தமிழ்நாடு (திருத்த சட்டமுன்வடிவு), 1981

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1981 ஆம் ஆண்டு வஃபு (தமிழ்நாடு திருத்தம்) சட்டமுன் வடிவு (*சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 70/1981) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று சட்டமுன் வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

---

*1982 மார்ச் 27 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

*1981 ஆகஸ்ட் 25 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 1 சட்ட முன்வடிவில் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன்.

In Clau e 1, in sub-clau e (1), for the figures "1981" substitute the figures '1982 திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 திருத்தப் பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "முகப்புரை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்;"

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழி கிறேன் : In the enacting formula for the words "Thirty-second year", subs itute the words "Thirty-third year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை திருத்தப்பெற்றப்படி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு வஃபு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 70/1981) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை 3-4-1982 காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.